செ.வெ.எண்: 657 தேதி: 11.12.2015

# மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் சீரமைப்பு

## (11.12.2015 அன்றைய நிலவரம்)

- நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் ஏற்பட்ட 97 சாலை உடைப்புகள் (செங்கல்பட்டு கோட்டம்–32, கடலூர் கோட்டம்–26, விழுப்புரம்–17 திருவள்ளூர் 6 மற்ற கோட்டங்கள்–16) உடனடியாக சரி செய்யப்பட்டு தங்கு தடையற்ற போக்குவரத்து நடைபெறுகிறது.

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ள சேதத்தினால் சாலைகளில் 39 இடங்களிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 24 இடங்களிலும் மற்றும் இதர மாவட்டங்களில் 180 இடங்களிலும் ஆழமாக ஏற்பட்ட அறுந்தோடிய சாலை புருவங்கள் சீரமைக்கப்பட்டன.

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 667 சிறுபாலங்கள் சீரமைக்கப்பட்டு தடையில்லா போக்குவரத்து நடைபெறுகிறது.

- வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளின் ஓடுதளம் போர்க்கால அடிப்படையில் ஜல்லி கலவை கொண்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பணியாளர்களுடன் கூடுதலாக 4 கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையிலான சிறப்புக் குழு (41 உதவிப் பொறியாளர்கள், 69 சாலை ஆய்வாளர்கள், 850 சாலைப் பணியாளர்கள்) மூலம் மழை வெள்ளத்தால் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் தேங்கிய குப்பைகளும், சகதிகளும் அகற்றப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றதாக சீர் செய்யப்பட்டது.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.